# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண் 227/மா/2025
நாள் 05.03.2026

T.R. முருகன்,
பொன்னகரம்,
திண்டுக்கல் மாவட்டம். --- முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
ஈரோடு மாநகராட்சி. --- எதிர் மனுதாரர்

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியப்பட்டி (PO), பொன்னகரம், கதவு எண் 346A என்கிற முகவரியில் வசிக்கும் திரு T.R முருகன் என்பவரின் 17.06.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 17.06.2025 அன்று பெறப்பட்டு 227/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியப்பட்டி (PO), பொன்னகரம், கதவு எண் 346A என்கிற முகவரியில் வசிக்கும் திரு T.R முருகன் என்பவர் 17.06.2025 நாளிட்ட தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

"ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் 2008 முதல் 2009 ஆம் ஆண்டில் GVS இன்ஜினியரிங் என்ற நிறுவனம் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் செய்ய ஒப்பந்தம் செய்தது.

(1) 38, 39, 49, 50 மற்றும் 60 ஆகிய வார்டுகளில் உள்ள வீடுகளுக்கு பாதாள சாக்கடை இணைப்பு கொடுத்துள்ளனர்.

(2) மேலே உள்ள வார்டுகளில் பணிகள் செய்து M-Book-ல் எழுதி பணமும் கொடுக்கப்பட்டு விட்டது.

(3) வீடுகளுக்கு இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. வீடுகளில் உள்ள அளவுகள் குறைவாகவும் M-Book-ல் அதிகப்படுத்தியும் காண்பிக்கப்பட்டுள்ளது.

(4) கள நிலவரத்தை விட M-Book Measurement அதிகமாக உள்ளது.

(5) இந்த முறைகேடு சம்பந்தமாக விஜிலென்ஸ் அலுவலகத்தில் புகார் மனு அளித்துள்ளேன்.

(6) இதற்கு உடந்தையாக இருந்த அதிகாரிகள் JE, AE, AWD, EE, CE, Commissioner மற்றும் ஒப்பந்ததாரர் அனைவர்கள் மீதும் தக்க நடவடிக்கை எடுத்து அரசிற்கு உண்டான இழப்பீட்டுத் தொகையை திரும்ப பெற வேண்டும்.

அரசிற்கு கோடிக்கணக்கில் ஊழல் செய்து, இழப்புகள் செய்த அனைத்து அரசு அதிகாரிகளையும் மற்றும் பணி செய்த ஒப்பந்ததாரர்களையும் கடுமையான நடவடிக்கை எடுக்கும்படி மிக தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம் முறைமன்ற நடுவ 04.07.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் ஈரோடு மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் தனது 17.11.2025 நாளிட்ட கடிதம் ந.க. எண்7548/2025/சி1 (மையம்)–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:–

> ''ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வார்டு எண் 38, 39, 49, 50, 60–ல் பாதாள சாக்கடைத் திட்டத்தின் வீட்டிணைப்புகள் வழங்கும் பணிக்கு 17.05.2018 நாளிட்ட நகராட்சி நிர்வாக ஆணையர் செயல் முறைகள் வாயிலாக 7000 இணைப்புகள் வீட்டின் உட்பகுதியில் வழங்க ரூ.6.40 கோடி மதிப்பில் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு, 29.05.2018 நாளிட்ட நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப் பொறியாளரின் செயல்முறைகள் வாயிலாக தொழில்நுட்ப அனுமதியும் பெறப்பட்டது. மேற்படி பணிக்கு 18.07.2018ம் தேதியன்று இணையதளம் மூலம் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு உரிய கூர்ந்தாய்வுகளுக்கு பின்னர் அதில் குறைந்த விலைவிகித ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்த M/s.GVS Engineering, Chennai நிறுவனத்திற்கு 07.08.2018 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்றது. மேற்படி பணி நடைபெறும் பொழுது சம்பந்தப்பட்ட வார்டுகளில் இளநிலை பொறியாளர்கள் மேற்பார்வையிலேயே பணி மேற்கொள்ளப்பட்டு அதற்குரிய அளவீடுகள் அளவுப் புத்தகத்தில் பதியப்பட்டது. அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட பணிகளின் அளவீடுகள் உதவி செயற்பொறியாளர்களால் சோதனை அளவு (Check Measurement) செய்யப்பட்டும் செயற்பொறியாளரால் மேலளவு செய்யப்பட்டு (Test Check) அதன் பின்னரே பட்டியல் தொகை வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் பணி முன்னேற்றம் தொடர்பாக மேற்படி நிறுவனம் வழங்கிய 3375 வீட்டு இணைப்புகளை UTIS Portal-ல் கேட்பு எழுப்பும் பொருட்டு பதிவேற்றம் செய்ய ஏதுவாக 23.06.2020 நாளிட்ட செயல்முறை கடிதத்தின்படி, ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அவர்களால் நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி, மாநகராட்சி பணியாளர்கள் மூலம் தல ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்கண்ட தல ஆய்வின்பொழுது M/s.GVS Engineering Construction நிறுவனம் மூலம் வீட்டு இணைப்புகள் வழங்கப்பட்ட விவரம் பதிவுகளின்படி ஒப்பிடப்பட்டு மிகையாக வழங்கப்பட்ட தொகை ரூ.16,48,296/– மற்றும் ரூ.5,20,572/– ஆகியவற்றை இப்பணியின் ஒப்பந்ததாரருக்கு வழங்கிய தொகையிலிருந்து 01.10.2021 பிடித்தம் செய்யப்பட்டு மேற்கண்ட நிறுவனத்திற்கு இதுவரை ரூ.2,12,81,239/– வழங்கப்பட்டுள்ளது. ஒப்பந்ததாரருக்கு இதுவரை இறுதி பட்டியல் வழங்கப்படவில்லை மேற்கண்டவாறு பிடித்தம் செய்யப்பட்டதற்கான ஆவணங்களின் நகல்கள் இத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படுகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.
>
> மேலும் புகார்தாரர் திரு. முருகன் என்பவர் மேற்படி பணியின் ஒப்பந்ததாரரான M/s.GVS Engineering, Chennai நிறுவனத்தில் உப ஒப்பந்ததாரராக (Sub Contractor) பணியாற்றியுள்ளார். அன்னாருக்கும், மேற்படி M/s.GVS Engineering, Chennai நிறுவனத்திற்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக இப்புகாரை வழங்கியுள்ளார் என்ற விவரத்தையும் சமர்ப்பிக்கப்படுகிறது.'' எனத் தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 19.11.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 07.11.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 19.11.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் 2018 முதல் 2019 வரை பாதாள சாக்கடை திட்டப்பணிகள் நிறைவேற்றிட GVS இன்ஜினியரிங் என்ற நிறுவனத்திற்கு ஒப்பந்தம் அளித்தனர். இந்த ஒப்பந்தப்பணியில் மனுதாராகிய நான் உப ஒப்பந்ததாரராக (Sub Contractor) இருந்தேன். எனவே கீழே குறிப்பிட்டுள்ள புகார்கள் குறித்த உண்மைத்தன்மை எனக்கு நன்றாக தெரியும்.

1. வார்டு எண்கள் 38, 39, 49, 50 மற்றும் 60 ஆகியவற்றில் உள்ள வீடுகளுக்கு பாதாள சாக்கடை இணைப்பு செய்ய சொன்னார்கள்.

2. வீடுகளுக்கு இணைப்பு கொடுக்கப்பட்டதில், வீடுகளில் உள்ள அளவுகள் குறைவாகவும் M-Book-ல் அதிகப்படுத்தியும் காண்பிக்கப்பட்டுள்ளது.

3. கள நிலவரத்தை விட M-Book Measurement அதிகமாக உள்ளது.

4. உதாரணமாக ஒரு வீட்டிற்கு இரண்டு சேம்பர் மூலம் இணைப்பு கொடுக்கப்பட்டது. அந்த சேம்பரில் கட்டுமான பணி $4.^{1}/_{2}$'' X $1.^{1}/_{2}$''ஆகும். ஆனால் M-Book Measurement–ல் 9'' X 1.1/2" என்று முறைகேடாக பதியப்பட்டு அதற்குண்டான தொகை வசூலிக்கப்பட்டுள்ளது. மேலும் ஒரு இணைப்பிற்கு பதிலாக 2 அல்லது 3 இணைப்புகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

5. ஒப்பந்ததாரரிடமிருந்து Double Entryக்கான தொகை மட்டும் ஒப்பந்ததாரரிடமிருந்து வசூலிக்கப்பட்டுள்ளது. ஆனால் அளவுகளில் செய்த முறைக்கேட்டிற்கு ஆன தொகை வசூலிக்கப்படவில்லை.

6. இந்த முறைக்கேடு சம்மந்தமாக விஜிலென்ஸ் அலுவலகத்தில் புகார் மனு அளித்துள்ளேன்.

எனவே, இதற்கு உடந்தையாக இருந்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் ஒப்பந்ததாரர் அனைவர்கள் மீதும் தக்க நடவடிக்கை எடுத்து அரசிற்கு உண்டான இழப்பீடுத் தொகையை பெற வேண்டும். மற்றும் அரசிற்கு கோடிக்கணக்கில் ஊழல் செய்து, இழப்புகளை செய்த அனைத்து அரசு அதிகாரிகள் மற்றும் பணி செய்த ஒப்பந்ததாரர்கள், மீது கடுமையான நடவடிக்கை எடுக்கும்படி இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.".

6. எதிர்மனுதாரர் தரப்பில் ஈரோடு மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் 19.11.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

"ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வார்டு எண்.38,39,49,50 மற்றும் 60–ல் பாதாள சாக்கடைத் திட்டத்தின் வீட்டிணைப்புகள் வழங்கும் பணிக்கு 17.05.2018 நாளிட்ட செயல் முறைகள் வாயிலாக 7000 இணைப்புகள் வீட்டின் உட்பகுதியில் வழங்க ரூ.6.40 கோடி மதிப்பில் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு, 29.05.2018 நாளிட்ட செயல்முறைகள் வாயிலாக தொழில்நுட்ப அனுமதியும் பெறப்பட்டது. மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு பின்னர் அதில் குறைந்த விலை விகித ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்த M/s.GVS Engineering Construction, Chennai நிறுவனத்திற்கு 07.08.2018 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்றது.

மேற்படி பணிநடைபெறும் பொழுது சம்பந்தப்பட்ட வார்டுகளில் அப்போதைய உதவி பொறியாளர்கள், இளநிலை பொறியாளர்கள் மேற்பார்வையிலேயே பணி மேற்கொள்ளப்பட்டு அதற்குரிய அளவீடுகள் அளவுப் புத்தகத்தில் பதியப்பட்டது. அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட பணிகளின் அளவீடுகள் அப்போதைய உதவி செயற்பொறியாளர்களால் சோதனை அளவு (Check Measurement) செய்யப்பட்டும் அப்போதைய செயற்பொறியாளர்களால் மேலளவு செய்யப்பட்டு (Test Check) அதன் பின்னரே பட்டியல் தொகை வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் பணி முன்னேற்றம் தொடர்பாக மேற்படி நிறுவனம் வழங்கிய 3375 வீட்டு இணைப்புகளை UTIS Portal-ல் கேட்பு எழுப்பும் பொருட்டு பதிவேற்றம் செய்ய ஏதுவாக ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அவர்களால் நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி மாநகராட்சி பணியாளர்கள் மூலம் தல ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேற்கண்ட தல ஆய்வின்பொழுது Double Entry–க்கான மிகையாக வழங்கப்பட்ட தொகை ரூ.16,48,296/– மற்றும் ரூ.5,20,572/– ஆகியவை இப்பணியின் ஒப்பந்ததாரர் M/s.GVS Engineering Construction, Chennai நிறுவனத்திடமிருந்து 01.10.2021 பிடித்தம் செய்யப்பட்டு மேற்கண்ட நிறுவனத்திற்கு இதுவரை ரூ.2,12,81,239/– வழங்கப்பட்டுள்ளது. ஒப்பந்ததாரருக்கு இதுவரை இறுதி பட்டியல் வழங்கப்படவில்லை மேலும் மனுதாரர் குறிப்பிட்டவாறு மேற்கண்ட ஒப்பந்தப்பணியின் அளவீட்டிற்கு கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டு ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்டியிருப்பின் ஆய்வுக்கு பின் அத்தொகை ஒப்பந்ததாரருக்கு வழங்கக் கூடிய இறுதி பட்டியலில் பிடித்தம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.''.

7. மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம், எதிர்மனுதாரர் ஈரோடு மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் உதவி செயற்பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

''ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் 2018 முதல் 2019 வரை பாதாள சாக்கடை திட்டப்பணிகள் நிறைவேற்றிட ஒப்பந்தம் அளிக்கப்பட்ட GVS இன்ஜினியரிங் கட்டுமான நிறுவனத்தில், உப ஒப்பந்ததாரராக (Sub Contractor) இருந்த மனுதாரர், வார்டு எண்கள் 38, 39, 49, 50 மற்றும் 60 ஆகியவற்றில் உள்ள வீடுகளுக்கு பாதாள சாக்கடை இணைப்பு கொடுக்கப்பட்டதில், வீடுகளுக்கு வழங்கப்பட்ட இணைப்புகளின் அளவுகள் குறைவாகவும் M-Book Measurement-ல் அதிகமாகவும் உள்ளது என்பதும், உதாரணத்திற்கு ஒரு வீட்டிற்கு இரண்டு சேம்பர் மூலம் இணைப்பு கொடுக்கப்பட்டு, அந்த சேம்பரில் கட்டுமான பணி $4.^{1}/_{2}$'' X $1.^{1}/_{2}$'' என்று உள்ள நிலையில், M-Book Measurement–ல் 9'' X $1.^{1}/_{2}$'' என்று முறைகேடாக பதியப்பட்டு அதற்குண்டான தொகை வசூலிக்கப்பட்டுள்ளது என்பதும், ஒரு இணைப்பிற்கு பதிலாக 2 அல்லது 3 இணைப்புகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்பதும், ஒப்பந்ததாரரிடமிருந்து Double Entry க்கான தொகை மட்டும் ஒப்பந்ததாரரிடமிருந்து வசூலிக்கப்பட்டுள்ளது என்பதும், ஆனால் அளவுகளில் செய்த முறைக்கேட்டிற்கு ஆன தொகை வசூலிக்கப்படவில்லை என்பதும், இந்த முறைக்கேடு சம்மந்தமாக விஜிலென்ஸ் அலுவலகத்தில் புகார்தாரர் புகார் மனு அளித்துள்ளார் என்பதும், இதற்கு உடந்தையாக இருந்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் பணி செய்த அனைத்து ஒப்பந்ததாரர்கள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்கும்படியும், அரசிற்கு உண்டான இழப்பீடுத் தொகையை பெறுவதற்கு தக்க நடவடிக்கை எடுக்கும்படியும் கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வார்டு எண்.38,39,49,50 மற்றும் 60–ல் பாதாள சாக்கடைத் திட்டத்தின் வீட்டிணைப்புகள் வழங்கும் பணிக்கு 7000 இணைப்புகள் வீட்டின் உட்பகுதியில் வழங்க ரூ.6.40 கோடி மதிப்பில் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு, தொழில்நுட்ப அனுமதியும் பெறப்பட்டது என்பதும், மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு பின்னர் அதில் குறைந்த விலை விகித ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்த M/s.GVS Engineering Construction, Chennai நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்றது என்பதும், மேற்படி பணி நடைபெறும் பொழுது சம்பந்தப்பட்ட வார்டுகளில் அப்போதைய உதவிப்பொறியாளர்கள், இளநிலை பொறியாளர்கள் மேற்பார்வையிலேயே பணி மேற்கொள்ளப்பட்டு அதற்குரிய அளவீடுகள் அளவுப் புத்தகத்தில் பதியப்பட்டு, மேற்கொள்ளப்பட்ட பணிகளின் அளவீடுகள் அப்போதைய உதவி செயற்பொறியாளர்களால் சோதனை அளவு (Check Measurement) செய்யப்பட்டும் அப்போதைய செயற்பொறியாளர்களால் மேலளவு செய்யப்பட்ட (Test Check) பின்னரே பட்டியல் தொகை ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதும், இந்நிலையில் பணி முன்னேற்றம் தொடர்பாக மேற்படி நிறுவனம் வழங்கிய 3375 வீட்டு இணைப்புகளை UTIS Portal-ல் கேட்பு எழுப்பும் பொருட்டு பதிவேற்றம் செய்ய ஏதுவாக ஈரோடு மாநகராட்சி ஆணையாளரால் நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி மாநகராட்சி பணியாளர்கள் மூலம் தல ஆய்வு மேற்கொள்ளப்பட்டது என்பதும், மேற்கண்ட தல ஆய்வின்பொழுது Double Entry–க்கான மிகையாக வழங்கப்பட்ட தொகை ரூ.16,48,296/– மற்றும் ரூ.5,20,572/– ஆகியவை இப்பணியின் ஒப்பந்ததாரர் M/s.GVS Engineering Construction, Chennai நிறுவனத்திடமிருந்து 01.10.2021 பிடித்தம் செய்யப்பட்டு, இதுவரை ரூ.2,12,81,239/– வழங்கப்பட்டுள்ளது என்பதும், ஒப்பந்ததாரருக்கு இதுவரை இறுதி பட்டியல் வழங்கப்படவில்லை என்பதால், மனுதாரர் குறிப்பிட்டவாறு மேற்கண்ட ஒப்பந்தப்பணியின் அளவீட்டிற்கு கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டு ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்டியிருப்பின் ஆய்வுக்கு பின் அத்தொகை ஒப்பந்ததாரருக்கு வழங்கக் கூடிய இறுதி பட்டியலில் பிடித்தம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும் ஈரோடு மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் உதவி செயற்பொறியாளரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வார்டு எண்.38,39,49,50 மற்றும் 60–ல் பாதாள சாக்கடைத் திட்டத்தின் வீட்டிணைப்புகள் வழங்கும் பணிக்கு குறைந்த விலை விகித ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்த M/s.GVS Engineering Construction, Chennai நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு, அப்பணிகள் நடைபெறும் பொழுது உரிய அலுவலர்களின் மேற்பார்வையிலேயே பணி மேற்கொள்ளப்பட்டு அதற்குரிய அளவீடுகள் அளவுப் புத்தகத்தில் பதியப்பட்டு, சோதனை அளவு (Check Measurement) செய்யப்பட்டும் மற்றும் மேலளவு செய்யப்பட்ட (Test Check) பின்னரே பட்டியல் தொகை ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும், இந்நிலையில் பணி முன்னேற்றம் தொடர்பாக மேற்படி நிறுவனம் வழங்கிய 3375 வீட்டு இணைப்பு பணிகள் குறித்து ஈரோடு மாநகராட்சி ஆணையாளரால் நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி மாநகராட்சி பணியாளர்கள் மூலம் தல ஆய்வு மேற்கொள்ளப்பட்ட போது Double Entry–க்கான மிகையாக வழங்கப்பட்ட தொகை ரூ.16,48,296/– மற்றும் ரூ.5,20,572/– ஆகியவை இப்பணியின் ஒப்பந்ததாரர் M/s.GVS Engineering Construction, Chennai நிறுவனத்திடமிருந்து பிடித்தம் செய்யப்பட்டு, மேற்கண்ட நிறுவனத்திற்கு பட்டியல் தொகை ரூ.2,12,81,239/– வழங்கப்பட்டது என்றும், ஒப்பந்ததாரருக்கு இதுவரை இறுதி பட்டியல் வழங்கப்படவில்லை என்றும், மனுதாரர் குறிப்பிட்டவாறு மேற்கண்ட ஒப்பந்தப்பணியின் அளவீட்டிற்கு கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டு ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்டியிருப்பின் ஆய்வுக்கு பின் அத்தொகை ஒப்பந்ததாரருக்கு வழங்கக் கூடிய இறுதி பட்டியலில் பிடித்தம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று ஈரோடு மாநகராட்சி உதவி செயற்பொறியாளரின் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ள நிலையில்,

(1) வீடுகளுக்கு இணைப்பு கொடுக்கப்பட்டதில், ஒப்பந்ததாரரிடமிருந்து Double Entry-க்கான தொகை மட்டுமே வசூலிக்கப்பட்டுள்ளது. ஆனால் அளவுகளில் செய்த முறைக்கேட்டிற்கு ஆன தொகை வசூலிக்கப்படவில்லை என்று தெரிய வருவதால், இந்நேர்வில், அரசுக்கு ஏற்பட்டுள்ள நிதியிழப்பீடு குறித்து உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையின் மூலம் சிறப்பு தணிக்கை மேற்கொண்டு அதனடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்குமாறும்,

(2) ஈரோடு மாநகராட்சி வார்டு எண்கள் 38, 39, 49, 50 மற்றும் 60–ல் பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் வீடுகளுக்கு இணைப்பு கொடுக்கப்பட்டதில், கள நிலவரத்தைவிட M-Book-ல் Measurement அதிகமாக பதியப்பட்டு அளவுகளில் செய்த முறைகேட்டிற்கு ஆன தொகை வசூலிக்கப்படவில்லை என்ற புகார் தொடர்பாக நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தில் மூன்றாம் நபர் குழு அமைத்து, இக்குற்றச்சாட்டுகள் குறித்து, அக்குழு ஆய்வு செய்து அளிக்கும் அறிக்கையினை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு சமர்ப்பித்து, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவ்வறிக்கையின் அடிப்படையில் வழங்கும் ஆணையின்படி உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஈரோடு மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 05–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. T.R. முருகன்,
கதவு எண் 346A, பொன்னகரம்,
ரெட்டியப்பட்டி (PO), திண்டுக்கல் மாவட்டம்,

(2) ஆணையாளர்,
ஈரோடு மாநகராட்சி,
ஈரோடு–638 001.

(3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

(4) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

நகல் :

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,,
இ.கோ. / உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

9/3/26
செயலாளர்.
9.3.26

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
வாய்மையே வெல்லும்
சென்னை–600 032